பக்கங்கள் 16+ 04

மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | ஐப்பசி 02 ஞாயிற்றுக்கிழமை 19.10.2025 | அதிர்வு 80

## சிக்கியது தொலைபேசி விரிவடையும் விசாரணை

**கைது வேட்டைகளும் தொடர்கின்றன**



பாதாள உலகக் குழு உறுப்பினர் கணேமுல்ல சஞ்சீவவைக் கொலை செய்வதற்குரிய திட்டமிடலுக்கு இஷாரா செவ் 02

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# பாதாள உலகக் குழுவை கூண்டோடு ஒழிப்போம்!

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சபதம்



“பாதாள உலகக் குழுவினர் இலங்கையின் அரசியலுக்குள்ளும் நுழைந்து விட்டனர். இந்தக் குழுவினரைக் கூண்டோடு ஒழித்துக் கட்டியே தீருவோம்.”

- இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

“இதுவரை கைது செய்யப்பட்டுள்ள பாதாள உலகக் குழு உறுப்பினர்களுக்கு நீதிமன்றத்தின் ஊடாக உரிய தண்டனை வழங்கப்படும். இவர்களுடன் தொடர்புடைய பொது 02



## பலமடைகின்றது மொட்டுக் கட்சி

**இப்படி நாமல் கூறுகின்றார்**

“ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி கிராம மட்டங்களிலும் பலமடைந்து வருகின்றது. மாகாண சபைத் தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட பின்னரே தேர்தலில் போட்டியிடும் விதம் பற்றி முடிவெடுக்கப்படும்.”

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ எம்.பி. தெரிவித்தார். 02

## ஐக்கிய மக்கள் சக்தி மறுசீரமைக்கப்படும்

### துஷார இந்துனில் தகவல்

“ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமைப் பதவியில் மாற்றம் வரப்போவதல்லை. எனினும், கட்சிக்குள் மறுசீரமைப்பு இடம்பெற்று, வியூகம் மாற்றம் இடம்பெறும்.”

– ஐக்கிய மக்கள் சக்தியின் சிரேஷ்ட உறுப்பினர் துஷார இந்துனில் தெரிவித்தார்.

இரு ஜனாதிபதித் தேர்தல்கள் உட்பட நான்கு தேர்தல்களில் ஐக்கிய மக்கள் சக்தி தோல்வியைச் சந்தித்துள்ளதால், தலைமைப் பதவியில் மாற்றம் வேண்டும் என்ற கருத்தை சிலர் முன்வைத்துவரும் நிலையிலேயே, துஷார இந்துனில் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம்



அவர் மேலும் தெரிவிக்கையில்,

“மாகாண சபைத் தேர்தலை எதிர்கொள்வதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தயாராகி வருகின்றது. எந்த முறைமையில் தேர்தல் நடைபெறும் என்பது தொடர்பான தகவல் வெளியான பின்னரே பிரச்சார வியூகம் வகுக்கப்படும். மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கு எதிர்பார்த்துள்ளேன்.” – என்றார்.

# பாதாளக் குழுவுடன் தொடர்புடையவர்களே அரசியல் பழிவாங்கல் என்று கதறுகின்றனர்

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவிப்பு




"சட்டம் தற்போது உரிய வகையில் அமுலாகி வருகின்றது. எனினும், பாதாள உலகக் குழுக்களுடன் தொடர் புடைய தரப்புகளே அரசியல் பழி வாங்கல் என்று விமர்சித்து வரு கின்றன."

– இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜய திஸ்ஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதவாது:–

"குற்றவாளிகள், பாதாள உலகக் குழுவினர், போதைப்பொருள் வியாபாரிகள் ஆகியோரைக் கைது செய்த பின்னர் அவர்கள் வழங்கும் தகவல்களின் அடிப்படையிலேயே கைதுகள் இடம் பெறுகின்றன. இது அரசியல் பழி வாங்கல் அல்ல. அவ்வாறு கூறி சட்டம் அமுலாவதை தடுக்க முடியாது. எவருக்கும் அநீதி இழைக்கப்படவில்லை. சட்டத்தின் பிரகாரமே நடவடிக்கை இடம்பெறுகின்றது.

பாதாள உலகக் குழுக்களை அண்டி இருந்த தரப்புகள்தான் தற்போது அஞ்சுகின்றன. பொலிஸாருக்குத் தேவையான வளங்களையே அரசு வழங்கி வருகின்றது. விசாரணைகளில் தலையிடவில்லை." – என்றார்.

## இந்திய விஜயத்தை முடித்துக் கொண்டு

# நாடு திரும்பினார் பிரதமர் ஹரிணி

இந்தியாவுக்கான உத்தியோகபூர்வ இராஜதந்திர விஜயத்தை முடித்துக்கொண்டு பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய நாடு திரும்பினார்.

பிரதமர் நேற்று சனிக்கிமை இரவு கட்டுநாயக்கா, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தும் நோக்கில் உத்தியோகபூர்வ விஜயமாக பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய கடந்த 16 ஆம் திகதி இந்தியாவுக்கு விஜயம் செய்தார்.

இதன்போது, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் அரசியல் தலைவர்களை அவர் சந்தித்துக் கலந்துரையாடினார் .இந்த விஜயத்தின் ஒரு பகுதியாக புதுடில்லியிலுள்ள என்.டி.ரி.வி. மற்றும் சிந்தன் ஆராய்ச்சி அறக்கட்டளை இணைந்து ஏற்பாடு செய்த என்.டி.ரி.வி. உலக மாநாட்டில் பிரதமர் முக்கிய உரையை நிகழ்த்தினார்.



### சிக்கியது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வந்தி பயன்படுத்தினார் எனக் கூறப்படும் கையடக்கத் தொலைபேசி சிக்கியுள்ளது.

கம்பஹா பகுதியில் புதைக்கப்பட்டிருந்த நிலையில் தொலைபேசி மீட்கப்பட்டுள்ளது. எனவே, அதனை ஆய்வு செய்த பின்னர் மேலும் பல முக்கிய தகவல்கள் அம்பலமாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இஷாரா செவ்வந்தி, ஜே.கே. பாய் உள்ளிட்ட தரப்புகளிடம் மேற்கொள்ளப்படும் விசாரணைகளின் பிரகாரம் தேடுதல் வேட்டைகளும், கைதுகளும் இடம்பெற்று வருகின்றன.

செவ்வந்தி தலைமறைவாகி இருந்த இடங்கள் மற்றும் சென்ற இடங்களுக்கு அவரை நேரில் அழைத்துச் செல்லப்பட்டு விசாரணைகள், தேடுதல்கள் இடம்பெற்று வருகின்றன.

அதேவேளை, கொலைச் சம்பவம் இடம்பெற்ற பின்னர் 2 மாதங்கள் வரை செவ்வந்தி மத்துகம மற்றும் மித்தெனிய பகுதிகளில் தலைமறைவாகி இருந்துள்ளார். அதன்பின்னரே அவர் யாழ்ப்பாணம் வந்து படகு மூலம் இந்தியா சென்றுள்ளார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடந்த மே மாதம் காலப் பகுதியிலேயே அவர் இலங்கையில் இருந்து தப்பிச் சென்றுள்ளார் எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

### பாதாள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நபர்கள், அரசியல்வாதிகள் எவரும் தப்ப முடியாது. அவர்கள் அனைவரையும் கைது செய்தே தீருவோம்.

உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் தலைமறைவாகியுள்ள சகல பாதாள உலகக் குழுவினரையும் கைது செய்து சிறையில் அடைப்போம்.

இந்த ஆட்சியில் பாதாள உலகக் குழுவினரைக் கூண்டோடு ஒழித்துக் கட்டியே தீருவோம்." – என்றார்.

### பலமடைகின்றது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

"மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்குரிய வேட்புமனு வழங்கும்போது, வேட்பாளர்கள் தொடர்பில் பொலிஸ் சான்றிதழ் பெறப்படும். போதைப்பொருள் வியாபாரத்துடன் தொடர்புடையவர்களா என்பது பற்றி ஆராயப்படும்.

குற்றவாளிகள் நாட்டைவிட்டுத் தப்பியோடுவதற்குக் கடவுச்சீட்டு செய்து கொடுக்கும் தரப்புகள் பற்றியும் விசாரணை நடத்தப்பட வேண்டும்." – என்றார்.



# பதவியா - ஹெப்பட்டிப்பொலாவ வீதியில் இடம்பெற்ற விபத்தில் வவுனியா ஆசிரியர் மரணம்; இருவர் காயம்!

(கி.வசந்தன்)

பதவியா – ஹெப்பட்டிபொலாவ பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் வவுனியா ஆசிரியர் ஒருவர் மரணமடைந்துள்ளார். இரு ஆசிரியர்கள் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்று இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

பதவியா பகுதியில் இடம்பெற்ற மரண சடங்கு ஒன்றிற்கு சென்று விட்டு காரில் திரும்பிய ஆசிரியர்கள் பதவியா – ஹெப்பட்டிக்கொல வீதியில் உள்ள மகா நெட்டியாவ பகுதியில் பயணித்த போது வர்களது கார் எதிரே வந்த பிக்கப்புடன் மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் வவவுனியா மடுக்கந்த ஸ்ரீ தம்மரத்ன வித்தியாதன பிரிவேன ஆசிரியர் சஞ்சீவா அவர்கள் மரணமடைந்தார். மேலும் இரு ஆசிரியர்கள் காயமடைந்து வவுனியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் ஹெப்பெற்றிபொலாவா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.








# கண்டியில் குளவிக்கொட்டு: இளைஞர்கள் ஐவர் பாதிப்பு!

கண்டி, ஹந்தான மலைப் பகுதிக்குச் சுற்றுலா சென்றிருந்த ஐவர் குளவிக்கொட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

இந்தச் சம்பவம் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

கொழும்பிலுள்ள தனியார் கல்வி நிறுவனமொன்றில் உயர் கல்வி பயிலும் 27, 28, 29 மற்றும் 31 வயதுடைய இளைஞர்களே இவ்வாறு குளவிக்கொட்டுக்கு இலக்காகியுள்ளனர்.குளவிக்கொட்டுக்கு இலக்கானவர்கள் கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.



# வென்னப்புவ கோணஹென பகுதியில் போதைப் பொருளுடன் இருவர் கைது!

**(கற்பிட்டி எம். எச். எம். சியாஜ்)**

வென்னப்புவ கோணஹென பகுதியில் 500.011 கிராம் போதைப் பொருளை ஓட்டேவில் சூட்சுமமான முறையில் மறைத்து கொண்டு சென்ற இருவரை விஷேட அதிரடிப்படையால் கோணஹென பகுதியில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு 11.30 மணியளவில் வென்னப்புவ நகரில் இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

கொன்வேவ, நாகொல்லாகமவைச் சேர்ந்த 37 வயதுடைய பெண்ணும், தெற்கு ரத்மலை, நாகொல்லாகமவைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞனும் இவ்வாறு போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டனர்.

போதைப்பொருள், ஓட்டோவுடன் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை மேலதிக விசாரணைக்காக வென்னப்புவ பொலிஸாரிடம் ஒப்படைக்க சிறப்பு அதிரடிப்படை அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

வென்னப்புவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

குணம்ஸ்
சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# வாய்ச் சவடால்

எதிரணியில் இருந்து கொண்டு ஆளும் தரப்பை குற்றம் சொல்வதும், மோசமாக விமர்சிப்பதும் சின்ன விடயங்கள். ஆனால் ஆட்சித் தரப்பாக மாறி, பொறுப்பை எடுத்து, விடயங்களை ஆக்கபூர்வமாகச் செயற்படுத்திக் காட்டுவது கஷ்டமானது. அது, இப்போது ஆட்சி அமைத்திருக்கும் தேசிய மக்கள் சக்திக்கு நன்கு புரியத் தொடங்கி இருக்கும் என நம்பலாம்.

ஆட்சிக் கட்டில் இருக்கும் அரசின் அமைச்சர்களுக்கு தலைநகர் கொழும்பில் அரசு இல்லங்கள் வழங்கப்பட்டமையை எதிரணியில் இருந்து மோசமாக விமர்சித்த ஜே.வி.பியையும் உள்ளடக்கிய தேசிய மக்கள் சக்தி, தாங்கள் ஆட்சிக்கு வந்தால் அப்படி அரசு சொத்தை விரயம் செய்ய மாட்டோம், அவற்றை உரிய முறையில் பயன்படுத்தி நாட்டுக்கு வருமானம் தேடுவோம் என்றெல்லாம் பீற்றிக் கொண்டார்கள். அதிகாரத்தை கைப்பற்றிய பின்னரும் அதையே கூறினர்.

இப்பொழுது அதிகாரத்துக்கு வந்ததும் முன்னைய அரசின் அமைச்சர்கள் இருந்த ஐம்பதுக்கும் அதிகமான அரச இல்லங்களை அவர்களை வெளியேற்றி திறப்புகளை பெற்றுக் கொண்டது இந்த அரசு.

ஆனால், அந்த அரச இல்லங்கள் ஒரு வருடமாகியும் பயன்படுத்தப்படாமல் உள்ளன. அதனால் அந்தக் கட்டடங்கள் சிதைந்து போகும், பாதுகாப்பின்றி சூறையாடப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று அக்கட்டடங்களில் முன்னர் வசித்த பிரமுகர்கள் கூறுகின்றனர்

ஆட்சியைப் பொறுப்பேற்று ஒரு வருடமாகிவிட்டது.

ஆனால் இந்த வீடுகளை ஒதுக்குவதற்கான அளவுகோல்கள் குறித்து அரசாங்கம் இன்னும் முடிவு செய்யவில்லை என்று பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளாட்சித் துறை துணை அமைச்சர் ருவான் செனரத் கூறுகின்றார்.

அப்படி பார்த்தால் ஒவ்வொன்றும் பல கோடி ரூபா பெறுமதியான ஐம்பதுக்கு அதிக இல்லங்களை தலைநகரில் ஒரு வருட காலத்துக்கு மேல் பூட்டி வைத்து அதன் மூலம் நாட்டுக்கும் அரசுக்கும் பேரிழப்பை இந்த அரசுதான் ஏற்படுத்தி இருக்கின்றது.

அது மாத்திரமல்ல, இப்படி வீடுகள் பாதுகாப்பின்றி மூடப்பட்டிருப்பதால் அவை சிதைவுறும் ஆபத்தும் அந்த இல்லங்கள் துஷ்பிரயோகங்களுக்கு பயன்படுத்தும் நிலைமையும் ஏற்பட்டிருப்பதாக வேறு தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வீடுகளில் சில பாரம்பரிய கட்டடங்கள் என்பதால் அவற்றை சுற்றுலாத் திட்டங்களுக்கோ அல்லது வேறு எதற்கோ பயன்படுத்தக் கூடிய தாக மாற்ற முடியாது என்று முன்னாள் அமைச்சர் டிலும் அமுனுகம கூறுகின்றார்.

"தற்போதைய அரசாங்கம் செய்வது வெறும் விளம்பர 'ஸ்டண்ட்' (சாகசம்) மட்டுமே. காலி முகத்திடலில் கார்களைக் காட்டியபோதும் இதேதான் நடந்தது. சில எட்டு சிலிண்டர்கள் கொண்ட 'வி8' கார்கள் மிகவும் மலிவான விலையில் விற்கப்பட்டன. அதற்கு பதிலாக - அந்த விலைக்கு. - சாதாரண டபிள் கப் வாகனம் கூட வாங்க முடியாது. அப்படி அரசிடமிருந்து கை மாறியவை பின்னர் தெருக்களில் அதிக விலைக்கு விற்கப்பட்டன. இவை அனைத்தும் பொதுமக்களின் சொத்துகளை நாசமாக்கும் ஏமாற்று வேலைகளேதவிரவேறில்லை" என்றும் அவர் கூறினார்.

முன்னைய அமைச்சர்களிடமிருந்து அரசு பெற்றுக் கொண்ட பல வீடுகள் நூற்றாண்டு பழமையான கட்டடங்கள். அவற்றில் சிலவற்றை பராமரிப்பின்றி இடிந்து விழுவதற்கு அனுமதிப்பது தற்போதைய அரசாங்கத்தின் தொலை நோக்கு பார்வை மற்றும் நிர்வாகத்தில் அனுபவமின்மையைக் காட்டுகிறது என்று முன்னாள் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர கூறுகின்றார்.

வெறும் வாய்ச்சவடால் பயனற்றது என்பதுதான் இந்த நடவடிக்கைகளின் வெளிப்பாடு.



# பூண்டுலோயா - தலவாக்கலை பிரதான வீதி மழை வெள்ளத்தால் தாழ் இறங்கும் அபாயம்

கடந்த சில நாள்களாக மத்திய மலை நாட்டில் நுவரெலியா மாவட்டத்தில் பெய்து வரும் கன மழை காரணமாக பூண்டு லோயா – தலவாக்கலை பிரதான வீதியில் கும்புலு ஓயா பகுதியில் பிரதான நெடுஞ் சாலை தாழ் இறக்கம் கண்டுள்ளது.

இந்த நெடுஞ்சாலை குறுகியதானது. கும்புலு ஓயா பகுதியில் வீதியின் மேல் பகுதியில் பாரிய கற்பாறைகள் உள்ளன.

தொடர் மழை பெய்யும் பட்சத்தில் அந்த பிரதான வீதி தாழ் இறங்க வாய்ப்பு உள்ளது. அவ்வாறு தாழ் இறக்கம் ஏற் படும் பட்சத்தில் சாலையின் மேற் பகுதி யில் உள்ள பாரிய கற்பாறைகள் சரிந்து விழும் அபாயமும் உள்ளது.

அவ்வாறு கற்பாறைகள் சரிந்து விழும் பட்சத்தில் பூண்டுலோயா – தலவாக்கலை பிரதான வீதி கும்புலு ஓயா பகுதியில் பிரதான வீதி இல்லாமல் போகும் அபாயம் நேரலாம்.

தற்போது இவ் வீதி ஊடாக செல்லும் வாகனங்கள் மிகவும் அவதானமாக செல்ல வேண்டும் என கேட்டுக் கொள் ளப்பட்டுள்ளது.









# சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலையில் வாசிப்பு மாதத்தை முன்னிட்டுக் கருத்தமர்வு

(த.சுபேசன்)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மீசாலை பொது நூலகத்தால் சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலையில் கருத்தமர்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது மாணவர்களுக்கு இலக்கு நிர்ணயம், தயார்படுத்துதல், சிறந்த உணவுப் பழக்கவழக்கங்கள், சமுதாய மாற்றம், தொழிநுட்ப பிரழ்வுகள் தொடர்பாக கருத்தமர்வு என்பன இடம்பெற்றன.

கருத்தமர்வில் வளவாளர்களாக தென்மராட்சிப் பிரதேச செயலக மனித வள உத்தியோகத்தர்களான திருமதி நிலாந்தினி மோகனகாந்தன், தீபா கேதீஸ்வரன் ஆகியோர் பங்குபற்றினர்.



# மார்பகப் புற்று நோயால் பாதிக்கப்படும் பெண்களைப் பாதுகாக்க விசேட திட்டம்

(மட்டக்களப்பு நிருபர்)

மார்பகப் புற்று நோயால் பாதிக்கப்படும் பெண்களைப் பாதுகாக்க விசேட செயற்றிட்டம் சுகாதார அமைச்சால் கிழக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கிளீன் ஸ்ரீலங்கா திட்டத்தின் ஊடாக சர்வதேச மார்பக புற்றுநோய் தினத்தை முன்னிட்டு தேசிய புற்றுநோய் கட்டுப்பாடு நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் மார்பக புற்றுநோயை கண்டறிவோம் சிகிச்சை செய்வோம், தோற்கடிப்போம், எனும் திட்டத்தின் கீழ் பெண்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சி திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.உதயகுமார் தலைமையில் விழிப்புணர்வு நிகழ்வு மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் நேற்று சனிக்கிழமை (18) இடம்பெற்றது.

தற்போதைய காலகட்டத்தில் உலகளாவிய ரீதியில் அதிகப்படியான பெண்கள் இந்த நோயால் பாதிக்கப்படுகின்றனர். இலங்கையில் ஒரு நாளைக்கு மூன்று பேர் இதனால் மரணிக்கின்றனர். தினசரி 15 நோயாளிகள் இனம் காணப்படுகின்றனர். ஆய்வறிக்கை இந்த விவரங்களை வெளியிட்டுள்ளது. இந்த நோய் இளவயதிலேயே கண்டு பிடிக்கப்பட்டால் அதனை குணப்படுத்த முடியும் எனவும் பெண்கள் தினசரி சுய பரிசோதனை மூலம் இந்த நோயிலிருந்து காப்பாற்றிக் கொள்ள முடியும் எனவும், இந்த விழிப்புணர்வு நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் இரா. முரளீஸ்வரன் தெரிவித்தார்.



இந்த நிகழ்வுக்கு மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் இரா.முரளீஸ்வரன், மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் திருமதி.வி.சிவப்பிரியா மற்றும் விசேட வைத்திய நிபுணர்கள் சுகாதாரப் பிரிவினர் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

மார்பகப் புற்றுநோயின் பாதிப்புகள் பற்றி விசேட வைத்திய நிபுணர் எஸ்.ஸ்ரீதரனால் இங்கு மேலும் விசேட விளக்கங்கள் வழங்கப்பட்டன.




# தேசிய தீபாவளி பண்டிகை நிகழ்வுகள் இன்று ஹட்டனில்

(பொகவந்தலாவ நிருபர்)

புத்தசாசன மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், நுவரெலியா மாவட்ட செயலகம் மற்றும் நோர்வூட் பிரதேச செயலகம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் 2025 ஆம் ஆண்டுக்கான தேசிய தீபாவளி பண்டிகை இன்று (19) ஞாயிற்றுக்கிழமை ஹட்டன் பிரின்சசஸ் மண்டபத்தில் இடம்பெற்றது.


மத்திய மாகாண ஆளுனர் பேராசிரியர் சரத் அபேகோன் தலைமையில் இடம்பெற்ற தேசிய தீபாவளி பண்டிகைக்கு பிரதம அதிதிகளாகப் புத்தசாசனம் மத மற்றும் கலாசார அலுவல்கள் பிரதி அமைச்சர் கமகெதர திஸாநாயக்க மத மற்றும் கலாசார அலுவல்கள் பிரதி அமைச்சர் முனிர்முழப்பர், பெருந்தோட்டம் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப், நாடாளுமன்ற உறுப்பினர்களான மஞ்சுல சுரவீர ஆராய்ச்சி, கிருஸ்ணன் கலைச்செல்வி, பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அம்பிகா சாமுவேல் மற்றும் நுவரெலியா மாவட்ட செயகத்தின் செயலாளர் உத்தியோகத்தர்கள் நோர்வூட் பிரதேச செயலகத்தின் செயலாளர் உத்தியோகத்தர்கள் மதகுருமார்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதில்ஹட்டன்மாணிக்கப்பிள்ளையார் ஆலையத்தில் விசேட பூஜைகள் மற்றும் வழிபாடுகளில் ஈடுபட்ட அதிதிகள் ஹட்டன் மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தில் இருந்து ஹட்டன் பிரின்ஸ் மண்டபம் வரை பேரணியாக மண்டபத்தை வந்தடைந்தனர்.

இன்று இடம்பெற்ற பேரணியில் கோலாட்டம், மலையகத்தின் பாரம்பரிய கலையான காமன் கூத்து, அருச்சுன தவசு போன்ற வரலாற்றைப் பிரதிபிலிக்கக் கூடிய பல்வேறு கலை நிகழ்வுகளும் பேரணியை அலங்கரித்தன.

அதனை தொடர்ந்து மண்டபத்துக்கு வருகை தந்த அதிதிகள் ஊடாக நாட்டின் தேசியக் கொடியும் இந்த மதத்தை குறிக்கின்ற நந்தி கொடியும் ஏற்றப்பட்டன. இதன் போது பாடசாலை மாணவர்களால் தேசிய கீதமும் இசைக்கப்பட்டது.











# ஆதார வைத்தியசாலையில் சாரணர்களின் சிரமதான நிழ்வு

(றிபாஸ்)

அக்கரைப்பற்று கல்முனை மாவட்ட சாரண சங்கத்தின் ஏற்பாட்டில் கிளீன் ஶ்ரீலங்கா வேலை திட்டத்திற்கமைய நிந்தவூர் ஆதார வைத்தியசாலையில் சிரமதான நிகழ்வு நேற்று சனிக்கிழமை (18) இடம்பெற்றது.

மாவட்ட சாரண ஆணையாளர் எம்.ஐ. உதுமாலெப்பை தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் வைத்திய அத்தியட்சகர் எம்.பீ.ஏ.வாஜீத் பிரதம அதிதியாகவும், கிழக்கு மாகாண சாரண இணைப்பாளர் சசிகுமார் கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் மாவட்ட சாரணர் சங்க செயலாளர்,உதவி மாவட்ட ஆணையாளர்கள், சாரண ஆசிரியர்கள், சாரணர்கள் வைத்தியசாலை ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டனர் என்று உதவி மாவட்ட ஆணையாளர் எம். எப.றிபாஸ் தெரிவித்துள்ளார்.






# சர்வதேச பார்வையாளர்கள் தினத்தில் சுகாதார துறையினருக்கு பரிசோதனை!

**(வி.ரி. சகாதேவராஜா)**


சர்வதேச பார்வை தினத்தை முன்னிட்டு கல்முனை ஆதார வைத்தியசாலையில் பணிப்பாளர் கலாநிதி டாக்டர் சுகுணன் குணசிங்கத்தின் ஆலோசனைக்கு இணங்க வைத்தியசாலையின் உத்தியோகத்தர்கள் ஊழியர்களுக்குக் கண்பார்வை பரிசோதனை நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் வைத்தியர்கள், தாதியர்கள், மருத்துவம் சாரா உத்யோகத்தர்கள், தொழில்நுட்பவியலாளர்கள் மற்றும் சுகாதார ஊழியர்கள் உள்ளிட்ட சுமார் 50 இற்கும் மேற்பட்டோர் கண் பரிசோதனை செய்து கொண்டனர்.

வைத்தியசாலையின் கண் சத்திர சிகிச்சை வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி மருத்துவர் சிதேஸ் ஹெந்த விதாரண தலைமையிலான வைத்தியர், தாதியர், தொழில் நுட்பவியலாளர்கள் மற்றும் சுகாதார ஊழியர்கள் உள்ளிட்ட குழுவினரால் இந்த நிகழ்வு நடத்தப்பட்டது.

நிகழ்வின் இறுதியில் வைத்திய சாலையில் பணிப்பாளரின் கருததுக்கு இணங்க எதிர்வரும் காலங்களில் எமது அனைத்து பணியாளர்களும் கண் பரிசோதனை செய்யப்பட்டிருக்க வேண்டும் என்பதுடன் அனைத்து பணியாளர்களதும் ஆரோக்கியம் பேணப்பட வேண்டும் எனவும் கூறப்பப்பட்டது.





# தெதுரு ஓயா, ராஜாங்கனை வான்கதவுகள் திறக்கப்பட்டன

**(கற்பிட்டி எம். எச். எம். சியாஜ்)**

தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக தெதுரு ஓயா, ராஜாங்கனை மற்றும் அங்கமுவ நீர்த் தேக்கங்களின் வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன என்று நீர்ப்பாசனத் துறை தெரிவித்துள்ளது.

நேற்று சனிக்கிழமை (18) அதிகாலை நிலவரப்படி, தெதுரு ஓயா நீர்த்தேக்கத்தின் 02 வான்கதவுகள் தலா 02 அடி திறக்கப்பட்டுள்ளன.

திறக்கப்பட்ட இந்த வான்கதவுகளில் இருந்து தெதுரு ஓயாவுக்கு வினாடிக்கு 2800 கன அடி நீர் வெளியேற்றப்படும் என்றும் நீர்ப்பாசனத் துறை கூறுகிறது.

ராஜாங்கனை நீர்த்தேக்கத்திலும் 04 வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. 02 வான்கதவுகள் தலா 02 அடி திறக்கப்பட்டுள்ளன. மற்ற 02 வான் கதவுகள் தலா 04 அடி திறக்கப்பட்டுள்ளன. திறக்கப்பட்ட இந்த வான் கதவுகளில் இருந்து கலா ஓயாவுக்கு வினாடிக்கு 3010 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படும்.

இதற்கிடையில், அங்கமுவ நீர்த்தேக்கத்தின் 02 தானியங்கி வான் கதவுகளும் தலா 04 அடி திறக்கப்பட்டுள்ளன. திறக்கப்பட்ட வான் கதவுகளில் இருந்து வினாடிக்கு 2384 கன அடி நீர் வெளியேற்றப்படும் என்று நீர்ப்பாசனத் துறை தெரிவித்துள்ளது.

திறக்கப்பட்ட வான் கதவுகளில் இருந்து வெளியேற்றப்படும் நீர் கலா ஓயா மற்றும் தெதுரு ஓயாவில் சேரும் என்று புத்தளம் அனர்த்த முகாமைத்துவப் பிரிவு கூறுகிறது. எனவே அப்பகுதியில் வசிப்பவர்கள் பாதுகாப்பாகச் செயல்படுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.





# சம்மாந்துறையில் புத்தகக் கண்காட்சி!

(நூருல் ஹுதா உமர்)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு, சம்மாந்துறை பிரதேச சபையின் கீழுள்ள நூலகங்கள் இணைந்து ஏற்பாடு செய்த புத்தகக் கண்காட்சி அப்துல் மஜீட் மண்டபத்தில் நேற்று சனிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சம்மாந்துறை பிரதேச சபை தவிசாளர் ஐ.எல்.எம்.மாஹிர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு அம்பாறை மாவட்ட கரையோர பிரதேச செயலகங்களின் அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும், அரசியலமைப்பு பேரவை உறுப்பினரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ.ஆதம்பாவா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.முஹம்மது ஹனீபா, தென் கிழக்கு பல்கலைக்கழக நூலகர் எம்.எம்.ரிபாயுதீன், சம்மாந்துறை பிரதேச சபை உறுப்பினர்கள், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் ஐ.பஸ்மிலா, நூலகர்கள், பிரதேச சபையின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இந்த புத்தகக் கண்காட்சியை இன்று ஞாயிற்றுக்கிழமையும் நாளை திங்கட்கிழமையும் காலை 09 மணி முதல் இரவு 09 மணிவரை பொதுமக்கள் பார்வையிட முடியும். இக்கண்காட்சியில், சம்மாந்துறை எழுத்தாளர்களின் நூல்கள், பல்துறைப் புத்தகங்கள், சிறார்களுக்கு ஏற்ற வாசிப்பு நூல்கள், இலக்கியம், அறிவியல், வரலாறு, நாவல்கள் உள்ளிட்ட பல்வேறு வகை நூல்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.





# பொதுப் பாதுகாப்புத் தொடர்பில் மாணவர்களுக்கு விழிப்புணர்வு





(நூருல் ஹுதா உமர்)

நாட்டில் பாடசாலை மாணவர்களை மையப்படுத்திய குற்றச் செயல்கள், சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான முறைப்பாடுகள், மாணவர்கள் மற்றும் இளைஞர்களை இலக்கு வைத்தான போதை பாவனை மற்றும் வியாபாரம் போன்ற விடயங்கள் அதிகரித்து காணப்படுகின்றன.

இதனால், மாணவர்களின் பொது பாதுகாப்பு மற்றும் கல்வி எதிர்காலம் குறித்து அதிக அச்சம் தோன்றியுள்ளது. இந்த நிலையில், பாடசாலை மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி, ஆபத்தான சூழ்நிலையில் உள்ள மாணவர்களை இனங்கண்டு அவற்றிலிருந்து மீட்டு ஆரோக்கியமான பாடசாலை சூழலை உருவாக்கும் நோக்கில் மாணவர்களுக்கான உளவள ஆலோசனை மற்றும் பொதுப் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

இத்தொடரில், இறக்காமம் பொலிஸ் நிலையத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட விழிப்புணர்வு நிகழ்வு, கல்முனை அல் – அமீன் மகாவித்தியாலயத்தில் கல்லூரி முதல்வர் எஸ்.எல். கலந்தர் லெப்பை தலைமையில் நடைபெற்றது.

மாணவர்களின் பொதுப் பாதுகாப்பு மற்றும் சிவில் சட்ட மற்றும் ஒழுங்கு விதிகளை பேணுவதன் அவசியம் குறித்த தெளிவுரை பொது மக்கள் பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரி, உப பொலிஸ் பரிசோதகர் டி.எச். அலக்ஷான்டர் மற்றும் பொலிஸ் சார்ஜன்ட் எம்.டி. கடாபி ஆகியோரால் வழங்கப்பட்டது.

பாடசாலை சூழலில் மேல்நிலை மாணவர்களின் முன்மாதிரி மிக்க நடத்தை மற்றும் உளப்பாங்கு மாற்றத்தின் அவசியம் குறித்த விழிப்புணர்வு உளவளத்துணை உத்தியோகத்தர் ஏ.எச். றகீப்பால் வழங்கி வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில், பொது மக்கள் பொலிஸ் பிரிவில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் எஸ்.எல். பாஹிரும் கலந்து கொண்டார்.





# மட்டு. உதயத்தால் உறுப்பினர்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கல்

(பழுவூரான்)

மட்டக்களப்பு நொச்சிமுனை உதயம் விழிப்புலனற்றோர் சங்கம் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு 70 பார்வையற்றவர்களுக்கான உலர் உணவுப் பொதிகளை வழங்கியது.

இந்த நிகழ்வு நேற்று சனிக்கிழமை (18) பாடசாலை மண்டபத்தில் இடம் பெற்றது.

உதயம் விழிப்புலனற்றோர் சங்கத் தலைவர் பி.டிசாந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் கே.இளங்குமுதன் மற்றும் மட்டக்களப்பு வலய கல்வி அபிவிருத்திக்கான பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி நிதர்ஷினி மகேந்திரகுமார் ஆகியோர் பிரதம அதிதிகளாகவும், கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகப் பணிப்பாளர் திருமதி பிரியதர்ஷினி ஜெதீஸ்வரன் மற்றும் மட்டக்களப்பு மாவட்டச் சமூக சேவை உத்தியோகத்தர் சாரங்கபாணி அருள்மொழி ஆகியோர் சிறப்பு அதிதிகளாகவும், சமூகவியலாளர் எஸ்.கலைவேந்தன் கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்டனர்.



இந்தப் பொதிகளை வழங்கும் நிகழ்வுக்கு ஜேர்மன் தமிழர் நலன்புரிச் சங்கம் நிதி அனுசரணை வழங்கியிருந்தது.

இந்த நிகழ்வில், உதயம் விழிப்புலனற்றோர் சங்க ஆலோசகர்களான ரி.விநாயகமூர்த்தி, ஐ.பகலவன் மற்றும் ரி.நேசதுரை, சங்க உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.



# சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தின் அதிரடி: சட்டத்தை மீறிய 12 மோட்டார் சைக்கிள்கள் மீட்பு!

(தில்சாத் பர்வீஸ் )

சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் தலைக்கவசம் அணியாமல், சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாமல், போதைப் பொருள், நீதிமன்ற பிடியாணை மற்றும் போக்குவரத்து சட்டதிட்டங்களை மீறிய குற்றச்சாட்டின் கீழ் சிலரை சம்மாந்துறை பொலிஸார் கைது செய்துள்ளனர். அத்தோடு மோட்டார் சைக்கிள்களையும் சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினர் மீட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று (18) சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது. அம்பாறை மாவட்டம், சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பிரதான வீதியில் வைத்து இந்தக் கைது இடம்பெற்றுள்ளது.

சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டிற்கு அமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் நடவடிக்கையின் போது, 1 கிராம் 700 மில்லிகிராம் கஞ்சாவுடன் ஒருவரும், ஒரு தொகை ஐஸ் போதைப் பொருளுடன் இருவரும், நீதிமன்றத்தில் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுயிருந்த சந்தேக நபர்கள் இருவருமே இந்த சுற்றிவளைப்பில் கைது செய்யப்பட்டனர் என்று சம்மாந்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன், சில மோட்டார் சைக்கிளையும் பொலிஸார் மீட்டனர். கைது செய்யப்பட்டவர்கள் சான்றுப் பொருள்களுடன் சட்ட நடவடிக்கைக்காகச் சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளனர்.

இந்தச் சுற்றிவளைப்பு நடவடிக்கையில் சம்மாந்துறை மற்றும் அம்பாறை பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

இந்தக் கைது நடவடிக்கையானது கல்முனை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எம்.கே. இப்னு அசாரின் ஆலோசனைக்கு அமைய, சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டபிள்யூ.ஏ.என்.நிசாந்த பிரதிப்குமாரவின் தலைமையிலான குழுவினால் மேற் கொள்ளப்பட்டது.

# சத்தீஸ்கரில் மாவோயிஸ்ட் அமைப்பின் 210 உறுப்பினர்கள் பொலிஸாரிடம் சரண்




தடை செய்யப்பட்ட மாவோயிஸ்ட் அமைப்பின் மத்திய குழு உறுப்பினர் உட்பட, 210 நக்சல்கள் சத்தீஸ்கரில் பொலிஸாரிடம் சரணடைந்துள்ளனர்.

இந்தியா முழுதும் அடுத்த ஆண்டு மார்ச் மாதத்திற்குள் நக்சல்களை முற்றிலும் ஒழிக்க மத்திய அரசு உறுதி பூண்டுள்ளது.

இந்நிலையில் நக்சல் பாதிப்பு அதிகமாக இருந்த சத்தீஸ்கரின் அபுஜ்மார் மற்றும் வடக்கு பஸ்தார் ஆகிய பகுதிகள் நக்சல் இல்லாத பகுதிகளாக அறிவிக்கப்பட்டன.

இந்நிலையில், பஸ்தார் மாவட்டத்தின் ஜக்தல்பூரில் பொலிஸார் மற்றும் துணை இராணுவப்படையினர் முன்னிலையில், 210 நக்சல்கள் நேற்று முன்தினம் சரண் அடைந்தனர்.

சரண் அடைந்த நக்சல்களில் தடை செய்யப்பட்ட மாவோயிஸ்ட் அமைப்பின் மத்திய குழு உறுப்பினரும் ஒருவர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளார்.

ஏ.கே.47 துப்பாக்கிகள் 19, தானியங்கி துப்பாக்கிகள் 17, இலகு ரக துப்பாக்கிகள் 30 உட்பட மொத்தம் 153 ஆயுதங்களையும் நக்சல்கள் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# எம்.பி.க்கள் தங்கியுள்ள குடியிருப்பில் தீ விபத்து



டில்லியில் எம்.பி.க்கள் தங்கியுள்ள குடியிருப்பில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

டில்லியின் பிஷாம்பர் தாஸ் மார்க் பகுதியில் பிரம்மபுத்ரா அடுக்குமாடிக் குடியிருப்பு உள்ளது. நாடாளுமன்ற வளாகத்தில் இருந்து 200 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள இந்தக் கட்டிடத்தை பிரதமர் நரேந்திர மோடி கடந்த 2020 ஆம் ஆண்டு திறந்து வைத்தார்.

இதில், நாடாளுமன்ற மக்களவை மற்றும் மாநிலங்களவை உறுப்பினர்கள் (எம்.பி) தங்கி உள்ளனர்.

இந்தக் குடியிருப்பு வளாகத்தில் நேற்று மதியம் தீ விபத்து ஏற்பட்டது. பின்னர் தீ வேகமாக பரவியது. அப்பகுதி புகை மண்டலமாக காட்சி அளித்துள்ளது. இதுகுறித்து தகவல் அறிந்த தீயணைப்புத் துறையினர், உடனடியாக 10 இற்கும் மேற்பட்ட தீயணைப்பு வாகனங்களுடன் அங்கு சென்று தீயை கட்டுக்குள் கொண்டுவந்தனர். இந்த விபத்தில் உயிரிழப்பு எதுவும் ஏற்படவில்லை.

தீ விபத்துக்கான காரணம் குறித்து அதிகாரிகள் ஆய்வு செய்து வருகின்றனர். அதேநேரம், அந்தக் குடியிருப்பு வளாகத்தில் இருந்த தீயணைப்பு சாதனங்கள் வேலை செய்யவில்லை என குடியிருப்புவாசிகள் புகார் தெரிவித்துள்ளனர்.








# பிரம்மோஸ் ஏவுகணை வரம்புக்குள் பாகிஸ்தான்; இந்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் எச்சரிக்கை

பிரம்மோஸ் ஏவுகணை வரம்புக்குள் பாகிஸ்தான் உள்ளது என பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பிரம்மேஸ் ஏவுகணை தயாரிப்பு மையம் உத்தர பிரதேசம் லக்னோவில் கடந்த மே மாதம் தொடங்கப்பட்டது. இங்கு தயாரிக்கப்பட்ட முதல் ஏவுகணை யூனிட்டை பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் நேற்று கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் அவர் உரையாற்றுகையில்,

“எனது சொந்த தொகுதியான லக்னோவில் 5 மாதங்களுக்கு முன்புதான் பிரம்மோஸ் ஏவுகணை ஆலை தொடங்கப்பட்டது. தற்போது முதல் யூனிட் வெளி வந்துள்ளது. நாட்டின் பாதுகாப்பு மற்றும் நம்பிக்கை வளர்ச்சியில் இது முக்கியமான நடவடிக்கை. பிரம்மோஸ் ஏவுகணை வெறும் ஆயுதம் மட்டும் அல்ல. இது உள்நாட்டு திறனின் அடையாளம். தரைப்படை, கடற்படை மற்றும் விமானப் படையின் முதுகெலும்பாக பிரம்மோஸ் ஏவுகணை விளங்குகிறது.

பாகிஸ்தான் முழுவதும் பிரம்மோஸ் வரம்புக்குள் உள்ளது. அந்த நாட்டின் எந்த பகுதியையும் தாக்கலாம். ஒபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின்போது, பிரம்மோஸ் ஏவுகணை தாக்குதலின் முன்னோட்டத்தை நாம் பார்த்தோம்.

உத்தர பிரதேசம் ஒரு காலத்தில் குண்டர்கள் ஆட்சி நடைபெறும் இடமாக கருதப்பட்டது. ஆனால் முதல்வர் யோகி ஆதித்யநாத் தலைமையில் உத்தர பிரதேசம் பிரம்மாண்ட மாற்றத்தை சந்தித்துள்ளது. முதலீடு மற்றும் பாதுகாப்புக்கு சாதகமான சூழல் இங்கு நிலவுகிறது. இங்கு பிரம்மோஸ் ஏவுகணை உற்பத்தி மையத்தில் ஆண்டுக்கு சுமார் 100 ஏவுகணை யூனிட்களை தயாரிக்க முடியும். இதன் மூலம் அடுத்த ஆண்டில் 3,000 கோடி இந்திய ரூபா வருவாய் கிடைக்கும்.

பிரம்மோஸ் ஏவுகணைக்கு உலகம் முழுவதும் வரவேற்பு உள்ளது. பிலிப்பைன்ஸ் நாட்டுக்கு பிரம்மோஸ் ஏவுகணை விற்பனை செய்தபின் 4,000 கோடி இந்திய ரூபா மதிப்பில் பிரம்மோஸ் ஏவுகணை வாங்க இரண்டு நாடுகள் ஒப்பந்தம் செய்துள்ளன. உலகம் முழுவதும் இருந்து நிபுணர்கள், லக்னோ வருவதால், பாதுகாப்பு தளவாட வரைபடத்தில் லக்னோ இடம்பிடித்துள்ளது. 2047 ஆம் ஆண்டுக்குள் வளர்ந்த நாடு என்ற இலக்கை அடைய, பிரம்மோஸ் ஏவுகணை போன்ற திட்டங்கள் மிக முக்கியமானது.” என்று தெரிவித்தார்.

# தீபாவளி பண்டிகை களைகட்டியது; 3 நாள்களில் 14 லட்சம் பேர் பயணம்




தீபாவளி பண்டிகையை முன்னிட்டு சென்னையில் இருந்து கடந்த 3 நாள்களில் 14 லட்சத்துக்கும் மேற்பட்டோர் சொந்த ஊர்ளுக்கு புறப்பட்டுச் சென்றுள்ளனர் என தமிழக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதனால், பஸ், ரயில் நிலையங்களில் கூட்டம் அலைமோதியது. வீதிகளில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

தீபாவளியை முன்னிட்டு சென்னை, பெங்களூர் போன்ற பெருநகரங்களில் வசிப்போர் சொந்த ஊர்களுக்குச் செல்வதற்காக கடந்த 16ஆம் திகதி முதல் தமிழக போக்குவரத்துக் கழகம் சார்பில் சிறப்பு பஸ்கள் இயக்கப்பட்டு வருகின்றன. நேற்று முன்தினம் வரை சுமார் 3.50 லட்சம் பேர் சென்னையில் இருந்து சொந்த ஊர்களுக்கு அரச பஸ்களில் பயணித்துள்ளனர்.

தீபாவளிக்கு ஒருநாள் மட்டுமே உள்ள நிலையில், நேற்று பெரும்பாலான தனியார் நிறுவன ஊழியர்கள் உள்ளிட்டோர் சொந்த ஊர்களுக்குப் புறப்பட்டனர். ஆங்காங்கே தூறல் மழை பெய்தது. அதையும் பொருட்படுத்தாமல், புத்தாடை, இனிப்பு வாங்க கடைவீதிகளில் மக்கள் குவிந்ததால், சென்னையின் முக்கிய வீதிகள் பரபரப்பாக காணப்பட்டன.

இதேபோல, கோவை, திருப்பூர், திருச்சி, சேலம் உள்ளிட்ட நகரங்களில் இருந்தும் ஏராளமானோர் சொந்த ஊர்களுக்கு புறப்பட்டுச் சென்றனர். பயணிகள் சிரமமின்றி பயணிக்க வசதியாக தமிழகம் முழுவதும் அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் சார்பில் தொடர்ச்சியாக சிறப்பு பஸ்கள் இயக்கப்பட்டன. வழக்கமான ரயில்கள் தவிர, சிறப்பு ரயில்களும் இயக்கப்பட்டன. அனைத்துவாகனங்களிலும் கூட்டம் அதிக அளவில் காணப்பட்டது.

சென்னையில் கிளாம்பாக்கம், கோயம்பேடு, மாதவரம் உள்ளிட்ட பஸ் நிலையங்களில் இருந்து வெளியூர்களுக்கு சிறப்பு பஸ்கள் தொடர்ந்து இயக்கப்பட்டன. கடும் போக்குவரத்து நெரிசல் காரணமாக கிளாம்பாக்கத்துக்கு சிறப்புப் பஸ்கள் வருவதில் தாமதம் நிலவியது. இதனால் பயணிகள் நீண்ட நேரம் காத்திருந்து பயணம் செய்தனர்.

ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொலிஸார் கிளாம்பாக்கம் பஸ் நிலையத்தில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.



# போர்த்துக்கலில் பொது இடங்களில் முகத்தை மறைக்கும் ஆடைக்கு தடை

பொது இடங்களில் மத நோக்கங்களுக்காகப் பெண்கள் அல்லது ஆண்கள் முகம் மறைக்கும் துணிகளை அணிவதைத் தடை செய்யும் சட்ட மூலத்திற்கு போர்த்துகல் நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது.

இந்த ஆடைகள் முஸ்லிம்கள் பயன்படுத்தும் பர்கா, நிகாப் என அழைக்கப்படும்.

இந்த புதிய சட்டத்தின் கீழ், பொதுச் இடங்களில் முகத்தை மறைக்கும் ஆடைகளை அணிந்தால் விதிக்கப்படும் அபராதம் 234- 4,671 அமெரிக்க டொலர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சட்டத்தின்படி, ஒருவரை இவ்வாறு முகத்தை மறைக்கும் ஆடைகளை அணியக் கட்டாயப்படுத்துவது மூன்று ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்கக்கூடிய குற்றமாகும்.

இருப்பினும் விமானங்கள், இராஜ தந்திர வளாகங்கள் போன்ற இடங்களில் இது போன்ற ஆடைகளை அணியலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மொசாம்பிக்கில் படகு விபத்து; இந்தியர்கள் 3 பேர் உயிரிழப்பு



மொசாம்பிக் நாட்டில் படகு கவிழ்ந்து 3 இந்தியர்கள் உயிரிழந்துள்ளனர்.

கிழக்கு ஆபிரிக்க நாடுகளுள் ஒன்று மொசாம்பிக். இங்கு ஏராளமான இந்தியர்கள் வசித்து வருகின்றனர்.

இந்நிலையில் மொசாம்பிக் நாட்டின் மத்திய பகுதியிலுள்ள பெய்ரா துறைமுகத்திலிருந்து நேற்று முன்தினம் காலை ஒரு படகு புறப்பட்டது.

துறைமுகப் பகுதியில் நிறுத்தப் பட்டிருந்த கப்பலுக்கு ஆட்களை ஏற்றிச் செல்ல அந்த படகு சென்றது. செல்லும் வழியில் அந்தப் படகு கடலில் திடீரென கவிழ்ந்தது. இதில் இருந்த 9 பேரும் மூழ்கினர். இந்த விபத்தில் 3 இந்தியர்கள் உயிரிழந்தனர்.

கடலில் விழுந்த 6 பேர் மீட்கப்பட்டனர். இதில் ஒருவர் சிகிச்சை பெற்று வருகிறார். மொசாம்பிக்கில் உள்ள இந்தியத் தூதரகம் இந்தத் தகவலை உறுதி செய்துள்ளது.









# காசாவில் பஸ் மீது இஸ்ரேல் இராணுவம் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 9 பேர் பலி

காசாவில் பஸ் மீது இஸ்ரேல் படைகள் நடத்திய துப்பாக்கிச் சூடு தாக்குதலில் பாலஸ்தீனிய குடும்பத்தைச் சேர்ந்த 9 பேர் உயிரிழந்தனர் என காசா சிவில் பாதுகாப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஹமாஸ் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் காசாவின் சிவில் பாதுகாப்பு நிறுவனத்தின் செய்தித் தொடர்பாளர் மஹ்மூத் பஸ்ஸல், "ஜெய்துன் பகுதிக்கு கிழக்கே இடம்பெயர்ந்தவர்களை ஏற்றிச் சென்ற பஸ் மீது இஸ்ரேல் படைகள் நடத்திய தாக்குதலில் 9 பேர் உயிரிழந்தனர். இந்த துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டவர்கள் அபு ஷபான் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். ஜெய்துன் பகுதியில் இருந்த தங்கள் வீட்டை கண்டறிய முயன்ற போது அவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்" என்று கூறினார்.


ஹமாஸுடனான போர் நிறுத்த ஒப்பந்தத்தின் கீழ் இஸ்ரேல் படைகள் நிறுத்தப்பட்டுள்ள எல்லைப் பகுதியான மஞ்சள் கோட்டின் அருகே வந்த சந்தேகத்திற்கிடமான வாகனத்தை நோக்கி படைகள் எச்சரிக்கை துப்பாக்கிச் சூடு நடத்தினர். ஆனால், அந்த வாகனம் அச்சுறுத்தும் வகையில் அருகே வந்ததால் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது என இஸ்ரேல் இராணுவம் தெரிவித்தது.

இஸ்ரேல் படைகளுக்கும் ஹமாஸுக்கும் இடையிலான போர் நிறுத்தம் இப்போது இரண்டாவது வாரத்தை எட்டியுள்ளது. ஆனால், போர் நிறுத்தம் தொடங்கியதிலிருந்து பல துப்பாக்கிச் சூடு சம்பவங்கள் பதிவாகியுள்ளன. மஞ்சள் கோட்டை நெருங்கும் அல்லது கடப்பவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியதாக இஸ்ரேல் இராணுவம் விளக்கமளித்துள்ளது.

போர் நிறுத்தம் தொடங்கியதிலிருந்து லட்சக்கணக்கான பாலஸ்தீனியர்கள் தங்கள் வீடுகளைத் தேடி வடக்கு காசாவுக்குத் திரும்பியுள்ளனர். இரண்டு ஆண்டுகளுக்கும் மேலான போரினால் ஏற்பட்ட பெரும் அழிவுக்கு மத்தியில் தங்கள் வீடுகளை கண்டுபிடிக்க முடியாமல் அவர்கள் சிரமத்தை சந்தித்துள்ளனர்.







பக்கங்கள் 04

கனடா முரசு

ஞாயிற்றுக்கிழமை 19/10/2025

## விமான நிலையங்களின் அறிவிப்புகளில் குளறுபடி

கனடா மற்றும் அமெரிக்கா விமான நிலையங்களின் பொது அறிவிப்பு பலகைகளை 'ஹேக்' செய்த மர்ம நபர்கள், ஹமாஸ்க்கு ஆதரவாகவும், அமெரிக்க ஜனாதிபதிக்கு எதிராகவும் 04






# கனடாவில் தீபாவளி கொண்டாட்டம்: கலந்து சிறப்பித்தார் பிரதமர் கார்னி

கனடா பிரதமர் மார்க் கார்னி தீபாவளி பண்டிகை கொண்டாட்ட நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை கனடாவில் கிரேட்டர் டொராண்டோ பகுதியில் நடைபெற்ற டிரில்லியம் தீபாவளி காலா 2025 (Trillium Diwali Gala 2025) நிகழ்வில் கனடா பிரதமர் மார்க் கார்னி கலந்து கொண்டு சிறப்பித்துள்ளார். 04

# கனடாவில் விபத்தில் பலியான இந்தியக் குடும்பம்; பொலிஸாரிடம் இழப்பீடு கோரும் குடும்பத்தினர்



விபத்தொன்றை ஏற்படுத்தி தங்கள் பெற்றோரும் பிள்ளையும் பலியாக காரணமாக இருந்த கனடா பொலிஸார் மீது இந்திய வம்சாவளி தம்பதியர் வழக்குத் தொடர்ந்துள்ளனர்.

கனடாவில், கடந்த ஆண்டு, ஏப்ரல் மாதம் 29ஆம் திகதி, மதுபானக்கடை ஒன்றில் திருடியதாக சந்தேகத்தின்பேரில் நபர் ஒருவரை பொலிஸார் துரத்த, அவர் வான் ஒன்றில் தப்பியோட, அவரது வான் மற்றொரு கார் மீது மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. 04



# இந்திய வம்சாவளி பிரபலத்துக்கு முனைவர் பட்டம் வழங்கிய கனடா

இந்திய வம்சாவளியினரான பிரபலம் ஒருவருக்கு கனடாவில் கௌரவ முனைவர் பட்டம் வழங்கப்பட்டுள்ளது.

யூடியூபராக இருந்து தொலைக்காட்சி பிரபலமாக மாறியுள்ள லில்லி சிங் என்பவருக்குதான் அந்த கௌரவம் அளிக்கப்பட்டுள்ளது.

லில்லி சிங்கின் பெற்றோரான சுக்விந்தர் சிங் மற்றும் மல்விந்தர் கௌர், இந்தியாவின் பஞ்சாபில் பிறந்து கனடாவுக்கு புலம்பெயர்ந்தவர்கள் ஆவர்.

லில்லிக்கு யோர்க் பல்கலை கௌரவ முனைவர் பட்டம் வழங்கியுள்ளது. சமுதாயத்துக்கு அவர் ஆற்றிய பங்களிப்பிற்ககவும், இசை மற்றும் பொழுது போக்குத்துறையில் அவரது சாதனைகளுக்காகவும் அவருக்கு இந்த கௌரவம் வழங்கப்பட்டுள்ளது.

2010ஆம் ஆண்டு இதே பல்கலையில் லில்லி உளவியல் துறையில் பட்டம் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.





# கனடாவில் வசிக்கும் புகலிடக் கோரிக்கையாளர் அமெரிக்க குடியேற்ற தடுப்பு அதிகாரிகளால் கைது

கனடாவில் வசிக்கும் புகலிடக் கோரிக்கையாளர் ஒருவர், தவறுதலாக எல்லையைத் தாண்டிய நிலையில் தற்போது அமெரிக்க குடியேற்ற தடுப்பு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த விவகாரத்தில், குறித்த நபரை மீட்க கனடா நிர்வாகம் உதவ மறுப்பதாக அவரது சட்டத்தரணி குற்றம் சாட்டியுள்ளார். கடந்த 2019 ஆம் ஆண்டு பங்களாதேஷிலிருந்து கனடா வந்த 28 வயதான மஹின் ஷாஹ்ரியர், புகலிடம் கோரி விண்ணப்பித்துள்ளார்.

இந்த நிலையில், நண்பர் ஒருவரின் அழைப்பை ஏற்று மாண்ட்ரீலுக்கு அருகில் குடியிருப்பு ஒன்றிற்கு சென்றுள்ளார். அந்த குடியிருப்பானது ஒரு கிராமப் புறத்தில் இருந்தது என்றும், அதைக் கண்டுபிடிக்க முடியாததால், அவர் நண்பரை அழைத்து வழி கேட்டதாகவும் கூறியுள்ளார்.

அதன் பின்னரே தாம் அமெரிக்காவில் நுழைந்துள்ளதாக தெரிய வந்தது என்றும், அது தன்னுடைய நோக்கமல்ல எனவும் ஷாஹ்ரியர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், அமெரிக்க குடியேற்ற தடுப்பு அதிகாரிகள் அவரை கைது செய்துள்ளனர்.



## விமான நிலையங்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
செய்திகளை வெளியிட்டமையால் பர பரப்பு நிலவியது.

இஸ்ரேல், ஹமாஸ் இடையே 2 ஆண் டுகளாக நீடித்த போர் , கடந்த 10 ஆம் திகதி முதல் தற்காலிகமாக முடிவுக்கு வந்துள்ளது. இந்தப் போரை முடிவுக்கு கொண்டு வந்ததில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்பின் பங்கு அளப்பரியது.

இந்தப் போர் நிறுத்தத்திற்கு உடன்பட மறுத்த ஹமாஸை, அமெரிக்க ஜனாதிபதி கடுமையாக எச்சரித்தார்.

இந்த நிலையில், அமெரிக்காவின் பென்சில்வேனியாவின் ஹாரிஸ்பர்க் சர்வதேச விமான நிலையம், கனடாவின் கெலோனா, விக்டோரியா மற்றும் வின்ட் சர் சர்வதேச விமான நிலையங்களின் பொது அறிவிப்பு பலகைகளை ஹமாஸ் ஆதரவாளர்கள் ஹேக் செய்தமை பரபரப்பை ஏற்படுத்தியது.




## கனடாவில் தீபாவளி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
டிரில்லியம் ஹெல்த் பார்ட்னர்ஸ் பவுண்டேஷன் நடத்திய இந்த தீபாவளி பண்டிகையில் கலந்து கொண்டு உரை யாற்றிய பிரதமர் மார்க் கார்னி, இது இருளை ஒளி வெல்வது எனவும், நம் பிக்கை புதுப்பித்தல் மற்றும் நற்பண்பு களை அதிகரிக்க செய்தல் ஆகியவை இந்த தீபாவளி பண்டிகையின் மைய மதிப்புகள் என்று விவரித்தார்.

அத்துடன் இந்த ஒளியின் திருநாள் கனடா முழுவதும் பரவி, நம் நாட்டின் பன்முகத்தன்மை மற்றும் ஒற்றுமையை கொண்டாடுவதாகவும் தெரிவித்துள் ளார்.

மேலும் இந்த நிகழ்வில், கனேடிய குடிமக்களின் அடிப்படை பாதுகாப்பு உரிமையையும் வலியுறுத்தி பிரதமர் மார்க் கார்னி பேசினார்.

மார்க் கார்னி பிரதமராக மார்ச் மாதம் பதவியேற்றுக் கொண்ட பிறகு கலந்து கொள்ளும் முதல் தீபாவளி கொண்டாட் டம் இது என்பது குறிப்பிடத்தக்கது.



## கனடாவில் விபத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
அந்த விபத்தில், காரில் பயணித்த, இந்தியாவின் தமிழ்நாட்டிலுள்ள சென் னையைச் சேர்ந்த மணிவண்ணன் ஸ்ரீனிவாசபிள்ளை (வயது 60), அவரது மனைவியான மஹாலக்ஷ்மி அனந்த கிருஷ்ணன் (வயது 55) மற்றும் தம்பதிய ரின் பேரப்பிள்ளையான மூன்று மாதக் குழந்தையும் பலியானார்கள்.

தம்பதியர், தங்கள் மகன் கோகுல்நாத் (வயது 33), மருமகள் அஷ்விதா ஜவஹர் (வயது 27) மற்றும் பேரனான மூன்று மாதக் குழந்தை ஆதித்யா விவான் ஆகி யோரைப் பார்ப்பதற்காக கனடா சென்றி ருந்த நிலையில் விபத்தில் உயிரிழந்ததால் அந்தக் குடும்பமே அதிர்ச்சியில் ஆழ்ந் தது.

இந்த விபத்தில் குறிப்பிடத்தக்க ஒரு விடயம் என்னவென்றால், விபத்தில் உயிர் பலிகளுக்கு காரணமான குற்ற வாளி மட்டுமின்றி, அவரைத் துரத்திச் சென்ற பொலிஸாரும், வீதியின் தவறான திசையில்தான் வாகனத்தை செலுத்தி சென்றார்கள். எனவே இது விதிமீறலா கும்.

ஆகவே, தவறான பாதையில் பய ணித்து தங்கள் குடும்பத்தில் மூன்று பேர் உயிரிழக்க காரணமாக இருந்த பொலிஸார் மீது கோகுல்நாத்தும் அஷ் விதாவும் வழக்குத் தொடர்ந்துள்ளனர்.

தங்கள் பெற்றோர் மற்றும் பிள்ளை யின் இழப்பால் கடும் மன உளைச்ச லுக்கும் அதிர்ச்சிக்கும் மன ரீதியில் பாதிப்புக்கும் உள்ளாகியுள்ளதாகவும், தங்களால் அன்றாடக வீட்டுப் பணிகளைக் கூட செய்ய இயலாத நிலை உருவாகியுள் ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

கோகுல்நாத், அஷ்விதா மற்றும் அவர் களுடைய குடும்ப உறுப்பினர்கள் இருவர், பொலிஸ் வாகனத்தை தவறான பாதை யில் ஓட்டி விபத்தை ஏற்படுத்திய இரண்டு பொலிஸார் மீதும் 25 மில்லியன் டொலர் கள் இழப்பீடு கோரி வழக்குத் தொடர்ந் துள்ளனர்.